


முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.2.2026) சென்னை, நேரு உள்விளையாட்டு அரங்கில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்பில் நடைபெற்ற சாம்பியன்ஸ் ஆப் தமிழ்நாடு – ஐந்தாண்டு கால விளையாட்டுச் சாதனை விழாவில், விளையாட்டு வீரர்களுக்கான 3 சதவிகித இடஒதுக்கீட்டின் கீழ் 62 மாற்றுத்திறனாளி விளையாட்டு வீரர்கள் உள்ளிட்ட 178 விளையாட்டு வீரர்களுக்கு பல்வேறு அரசுத் துறைகள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரிவதற்கான பணி நியமன ஆணைகளை வழங்கி வாழ்த்தினார். இதில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள், தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அரசு அதிகாரிகள் உடனிருந்தனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.2.2026) சென்னை, நேரு உள்விளையாட்டு அரங்கில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்பில் நடைபெற்ற சாம்பியன்ஸ் ஆப் தமிழ்நாடு – ஐந்தாண்டு கால விளையாட்டுச் சாதனை விழாவில், பன்னாட்டு, ஆசிய அளவிலான சாம்பியன்ஷிப் போட்டிகள், அகில இந்திய பல்கலைக்கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி மற்றும் பல்வேறு தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற 1172 வீரர் மற்றும் வீராங்களைகளுக்கு 33 கோடியே 51 இலட்சத்து 2 ஆயிரம் ரூபாய்க்கான உயரிய ஊக்கத்தொகையை வழங்கினார். இதில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள், தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அரசு அதிகாரிகள் உடனிருந்தனர்.



சென்னை, நேரு உள்விளையாட்டு அரங்கில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்பில் நடைபெற்ற சாம்பியன்ஸ் ஆப் தமிழ்நாடு – ஐந்தாண்டு கால விளையாட்டுச் சாதனை விழாவில், நேற்று (18.2.2026) தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுடன் விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டனர். உடன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை முதன்மைச் செயலாளர் சத்யபிரத சாகு, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, பாரா பேட்மிட்டன் விளையாட்டு வீரர் ஜெகதீஷ் டில்லி, ஜிம்னாசிஸ்டிக் வீராங்கனை சினேகா ஆகியோர் உள்ளனர்.

## சென்னையில் – தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சாதனைக் கொண்டாட்ட விழா:

# இந்தியாவில் 11.9 % மாநில வளர்ச்சியுடன் நம் முதலமைச்சர் ‘சாம்பியன் ஆஃப் சாம்பியன்ஸ்’ ஆகத் திகழ்கிறார்!

## 5 ஆண்டுகால சாதனை விழாவில் வரவேற்புரையாற்றிய துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் புகழாரம்!

**சென்னை,பிப்.19-**

**சென்னை, ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கில், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில், நடைபெற்ற ஐந்தாண்டு கால விளையாட்டுச் சாதனை கொண்டாட்ட விழாவில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய வரவேற்புரை வருமாறு:**

தமிழ்நாடு விளையாட்டுத் துறையின் மிகவும் வரலாற்றுச் சிறப்புமிக்க நாள் என்று இன்றைய நாளை நாம் சொல்லலாம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில், இன்று 178 விளையாட்டு வீரர்களுக்கு அரசுப் பணி, சுமார் 1,100-க்கும் மேற்பட்ட வீரர்களுக்கு 34 கோடி ரூபாய் உயரிய ஊக்கத்தொகை, 250 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சென்னை `உலகளாவிய நகரம்’ (Global City) திட்டத்தின் முதற்கட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டுதல் என இந்த நிகழ்ச்சி மிகச் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

இன்று ஒட்டுமொத்த நேரு விளையாட்டரங்கமும் வெற்றியாளர்களால் நிறைந்திருக்கி ன்றது. விளையாட்டுப் போட்டிகளில் ஒரு சிறந்த வீரர் மைதானத்துக்குள் நுழைந்தாலே பார்வையாளர் பகுதியில் இருக்கக்கூடிய அனைவரும் ஆரவாரம் செய்வார்கள். ஆனால், இன்று இந்த விளையாட்டரங்கம் முழுவதும் வெற்றியாளர்களால் நிறைந்திருக்கிறீர்கள். அதிலும் நம்முடைய தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய (SDAT) விடுதி மாணவர்களைப் பற்றி நாம் அதிகம் சொல்லத் தேவையில்லை, அவர்கள் மிகவும் சிறப்பானவர்கள்.

### சிறந்த பயிற்சியாளர்

ஒரு நல்ல விளையாட்டு வீரரை உருவாக்க வேண்டுமென்றால், அதற்குத் திறமையான ஒரு பயிற்சியாளர் முக்கியம். ஒரு நல்ல பயிற்சியாளர் வேண்டுமென்றால், அவர் நல்ல விளையாட்டு வீரராகத் தன்னை நிரூபித்திருக்க வேண்டும். அப்படி மக்கள் பணியில், சிறந்த விளையாட்டுப் பண்புடன் சாதனை படைத்து, இன்று இந்திய அரசியலிலேயே ஒரு சிறந்த பயிற்சியாளராக இருக்கக்கூடிய நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நமக்குக் கிடைத்திருக்கிறார்கள்.

அதனால்தான் முந்தைய ஆட்சியாளர்கள் ஓரங்கட்டி வைத்திருந்த விளையாட்டுத் துறையை, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இன்று முறைப்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள். அதற்கு இங்கே திரண்டிருக்கக்கூடிய தமிழ்நாட்டின் வெற்றியாளர்களாகிய நீங்கள்தான் (Champions of Tamil Nadu) மிகச் சிறந்த உதாரணம்.




### பொருளாதார வளர்ச்சி

நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு விளையாட்டில் மிகுந்த ஆர்வம் உண்டு. இன்னும் சொல்லப்போனால், முதலமைச்சர் அவர்களே ஒரு சிறந்த விளையாட்டு வீரர். இன்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்துகின்ற திட்டங்களால் தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி இரட்டை இலக்கத்தில் 11.19 சதவிகிதமாக உள்ளது. மற்ற மாநிலங்கள் எல்லாம் ஒற்றை இலக்கத்தில் இருக்கும்போது, நம்முடைய தமிழ்நாடு மட்டும் இரட்டை இலக்க வளர்ச்சியைப் பெற்றுள்ளது. அந்த வகையில், இன்று இந்தியாவில் இருக்கக்கூடிய முதலமைச்சர்களில் எல்லாம் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் `சாம்பியன் ஆப் சாம்பியன்ஸ்’ என்று சொல்லும் அளவு பணியாற்றி தமிழ்நாட்டை உயர்த்தி இருக்கிறார்.

### களத்தில் நிற்கும் மக்கள் முதல்வர்

நீங்கள் அனைவரும் விளையாட்டில் இருக்கிறீர்கள், உங்கள் அனைவருக்கும் நன்றாகத் தெரியும். கடினமாக உழைத்தால்தான் மைதானத்தில் வெற்றியாளராகத் திகழ முடியும். பயிற்சி எடுத்துக்கொண்டே இருக்க வேண்டும், களத்தில் இறங்கி ஆட வேண்டும், தற்கால மாற்றங்களுக்கு ஏற்ப நம்மை மாற்றிக் கொள்ள வேண்டும். அப்போதுதான் நாம் ஒவ்வொருவரும் வெற்றியாளராக முடியும். அந்த வகையில், எப்போதும் மக்களோடு மக்களாகக் களத்தில் இருக்கக்கூடிய ஒரு முதலமைச்சர் நம் முதலமைச்சர் அவர்கள்.

### நம்மால் வாங்க முடியுமா?

உங்களில் பலர் எளிய பின்னணியில் இருந்து வந்திருப்பீர்கள். நவீன விளையாட்டு உபகரணங்களை நம்மால் வாங்க முடியுமா, நமக்குக் கிடைக்குமா? வெளிநாடுகளில் நடைபெறுகின்ற போட்டிகளில் நம்மால் கலந்துகொள்ள முடியுமா? என்று உங்களுக்குள் பல நேரங்களில் ஏக்கங்கள் இருந்திருக்கும். அந்த ஏக்கத்தைப் போக்குவதற்குத்தான் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் `தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை’யைத் தொடங்கி வைத்தார்கள். விளையாட்டில் இருக்கக்கூடிய பலருடைய கனவுகளை, நம்முடைய தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை சாத்தியமாக்கிக் கொண்டிருக்கிறது.

தமிழ்நாட்டு நகரங்களில் மட்டுமல்ல, குக்கிராமங்களில் இருந்தும் பல விளையாட்டு வீரர்கள் உருவாகி வருகிறார்கள். தேசிய மற்றும் சர்வதேசப் போட்டிகளில் பதக்கம் வெல்லும் வீரர்களுக்கு உடனடியாக முதலமைச்சர் அவர்கள் உயரிய ஊக்கத்தொகையை வழங்குகிறார். அது மட்டுமல்ல, ‘கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் தொகுப்பு’, முதலமைச்சரின் `மினி ஸ்டேடியம்’, `மாற்றுத் திறனாளிகளுக்கான விளையாட்டு அரங்கம்’, சென்னைக்கு வெளியே பிற நகரங்களிலும் சர்வதேச விளையாட்டுப் போட்டிகள் என நம்முடைய அரசின் சாதனைகளை அடுக்கிக் கொண்டே போகலாம்.

### சிறந்து விளங்கும் மாநிலம்

வரலாற்றிலேயே இல்லாத வகையில் நம்முடைய அரசு அமைந்த பிறகு, இதுவரை முதற்கட்டமாகச் சென்ற ஆண்டு 120 வீரர்களுக்கு அரசுப் பணிகளை வழங்கினோம். அதன் தொடர்ச்சியாக இன்று இந்த மேடையில், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் 62 மாற்றுத்திறனாளி வீரர்கள் உட்பட 178 வீரர்களுக்கு அரசு வேலையை வழங்க இருக்கிறார்கள். இப்படி விளையாட்டில், தமிழ்நாடு இன்று அனைத்துத் துறைகளிலும் சிறந்து விளங்கும் மாநிலமாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறது.

ஒட்டுமொத்த விளையாட்டு உலகமே திரும்பிப் பார்க்கின்ற வகையில் தமிழ்நாட்டு விளையாட்டுத் துறை இன்று பல்வேறு சாதனைகளைத் தொடர்ந்து படைத்து வருகிறது. தமிழ்நாட்டின் சாம்பியன்களாக உயர்ந்திருக்கக்கூடிய உங்கள் அனைவரையும் மீண்டும் ஒருமுறை, `வருக வருக’ என்று வரவேற்கிறேன்.

### அனைவரையும் வரவேற்கிறேன்

இந்த விழாவிற்கு, வருகை தந்துள்ள திராவிட மாடல் நாயகர் நம்முடைய முதலமைச்சர் அவர்களையும் வரவேற்று மகிழ்கிறேன். விழாவில் பங்கேற்றுள்ள மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மதிப்பிற்குரிய மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மதிப்பிற்குரிய துணை மேயர் உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் அனைவரையும் வரவேற்கிறேன்.

தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் முருகானந்தம் ஐ.ஏ.எஸ்., இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் அரசு முதன்மைச் செயலாளர் சத்தியபிரசாத் சாஹூ ஐ.ஏ.எஸ்., அவர்களையும், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலாளர். மேக்நாத் ரெட்டி ஐ.ஏ.எஸ்., அவர்களையும், அனைத்து அரசு அதிகாரிகளையும் வருக வருக என்று வரவேற்கிறேன்.

மேடையில் அமர்ந்திருக்கக்கூடிய மாற்றுத் திறனாளி தடகள வீரர் தம்பி ஜெகதீஷ் டில்லி அவர்களையும், ஜிம்னாஸ்டிக் வீராங்கனை தங்கை சினேகா அவர்களையும், விழாவிற்கு வருகை தந்திருக்கக்கூடிய கபடி வீரர் சகோதரர் மணத்தி கணேசன் அவர்களையும் வருக வருக என்று வரவேற்கிறேன்.

வந்திருக்கக்கூடிய அனைத்து வீரர்களையும், சிறப்பாகப் பறையிசை நிகழ்ச்சியை நடத்திய இசைக் கலைஞர்களையும், உயரிய ஊக்கத் தொகை, தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதி உதவி, அரசுப் பணி ஆகியவற்றைப் பெற்றுள்ள அனைத்து வீரர்களையும், வீராங்கனைகளையும், தமிழ்நாட்டின் தன்னிகரில்லா மாற்றுத்திறனாளி வீரர், வீராங்கனைகளையும் வரவேற்று மகிழ்கிறேன்.

என்னுடைய மனதிற்கு எப்போதும் நெருக்கமான நம்முடைய பெருமைக்குரிய எஸ்.டி.ஏ.டி. (SDAT) மாணவர்கள், விளையாட்டு வீரர்களின் பெற்றோர்கள், பயிற்சியாளர்கள், இந்த விழாவின் வெற்றிக்காக உழைத்த நம்முடைய துறையின் அனைத்து அலுவலர்கள், பணியாளர்கள், தன்னார்வலர்கள், பத்திரிகை நண்பர்கள் அனைவரையும் வருக வருக என வரவேற்று விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வரவேற்புரையாற்றினார்.